உ

கல்லிடைக்குறிச்சி

இராஜபார்ட் சங்கீத சாப ஜனுப்

K. P. முகையதீன் சாஹிப் அவர்களின்

ஆசிரியர் ஆர்மோனியம்

T. K. சுந்தரம் அவர்கள்

இயற்றிய

பஜன ஜீவரத்னமிர்த மென்னும்

பக்திரசக்கீர்த்தனம்

(முதற்பாகம்)

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்

M. K. சந்தானகிருஷ்ணக் கோனர்

அவர்களால்

மதுரை மீனுக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

Register Copy Right] 1929 [விலை அணு 8.

உ

கடவுள் துணை.

பஜன் ஜீவரத்னுமிர்தமென்னும்

பக்திரசக்கீர்த்தனம்.

(முதற்பாகம்.)

இஃது

கல்லிடைக்குறிச்சி இராஜபார்ட் சங்கீத சரப ஜனுப்

K. P. முகையதீன் சாஹிப் அவர்களின்

ஆசிரியர் ஆர்மோனியம்

T. K. சுந்தரம் அவர்கள்

இயற்றியது.

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்

M. K. சந்தானகிருஷ்ணக் கோனர்

அவர்களால்

மதுரை மீனுக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

Register copy Right.] 1929. [விலை அணா 8.

T. K. [illegible]

முகவுரை.

தகவுரை யுற்றது தானஃதெனினும்
முகவுரை யற்றது மொழிநூலன்றும்.

இந்தியாவில் "பெரும்பாலும் "சுந்தரம் பாட்டு" என்ருல் அந்தரங்க பக்தியுடன் கேட்டுச்சிந்தை மகிழாதார் ஒரு சிலருமிலர்" என்றே சொல்லுதல் வேண்டும். இவர் நல்லஒரு சிறந்த ஆர்மோனிய வாத்தியரும் வல்ல ஒரு சிறந்த அருந் தமிழ் வாக்கியரும் ஆவர். இப்போழ்து தான் காலஞ்சென்ற கல்லிடைக்குறிச்சி சங்கீத வித்வான் உயர்தர இராஜபார்ட் ஜனுப் முகையதீன் சாயபு அவர்கள் வழக்கமாய்ப்பாடி வந் துளபாடல்களில் அபரிமிதமாவன இவருடையனவேயாகும். அவரை அறியாத ஒரு சிலரே இவரை அறியாதிருப்பினும் தற்போது நடனவல்லார் அனைவருமே இவர் பாடலை விரும் பிப் பாடுகின்றமையான் அனேகமாய் நந்தமிழ்நாடு இவரை நன்கறிந்திருக்கலா மென்பதும் சொல்லாமலே அமையும். இருதனம் படைத்தாரன்ன ஒருங்கே கல்வியிசைப்புலவரும் கருவியிசைப்புலவருமாய் இவர் போன்ருெருவரை முன் னரும் பின்னரும் கேட்டலும் காண்டலும் அரிது.

மதுரவாக்கான இவரது பாக்கள் முற்றும் பொருட் சிறப்பும் சொற்சிறப்பும் தொடையும் தொடை வகைகளும் மருவி, எதுகை மோனை முதலியனவற்றைத் தாம் தேடி வருந்தாது அவை தாமேவந்திடம்பெறத்தந்து உருவகமும் ஓசை நயமும் விரவி பக்திப்பெருக்கோ ராற்றின் போக் கெனச் செல்வதுடன் புருடாக்க மார்க்கம் நான்குமோ ரூற் ருய்போக்கெனவும் ஊன்றிப்படிப்பாருள்ளத்தையும் கேட் பாருள்ளத்தையும் சென்று சென்று நிரப்புகின்றன.

அந்தக்காலத்தில் அவலட்சண முடையாராயினும் ஆடம்பர மற்றவராயினும் கூன் குருடு செவிடே யாயினும் புலவரென்றால் உலகம் அவரைப்போற்றும். இக்காலத்தில் புலவரென்றால் போதும்; அவர் அங்கசங்க ஆடம்பராடாம்பீ கர முடையாராயிருப்பின் எங்கும் முதலிடம் பெற்று விடுவர். "தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு" என்பது போல் காலங்கள் தோறும் கோலங்கள் வேறு வேறாய் நிகழ்ந்து வருவனவற்றுள் பிறபாஷைகளைப் பேணுதலானும் இன்னும் பல காரணங்களானும் கல்வியின் பெருமை குன்றி வரும் இக்காலத்து எம்போன்றார்சிலர் இவரை எம்போன்றாரெனக்கருதினும் காலம் ஆண்டுபோன் மீண்டுறும் போழ்து "இவரோரு அருட்கவிப் புலவர்தாம்" என உலகம் பாராட்டுதல் கூடும் என்பது எமது துணிபு. பக்தியே ஒரு உருவெடுத்தன்ன பாராங்குசர் தியாகராஜையர் முதலிய இசை வல்லார் பாக்களையும் 'இக்காலத்து ஒருபாவொன்று ஒரு கோடி செம்பொன் விலைபெறு' மெனப் பாராட்டுதல் போன்று அக்காலத்து அதினும் அவர் காலத்துப் பாராட்டப் பெற்றிராதென்பது புனைந்துரை யன்று.

இதுவரை யாம் எத்துணையோ இசைப்பாக்களைப் படித்துணர்ந்தும் பாடுவார் பாட்டுக் கேட்டுணர்ந்தும் மகிழ்வடைந்திருக்கின்றோமாயினும் பக்திச்சுவை நனி சொட்டுப் பண்களினமைந்த இவர் பாக்களினூடு நுகரப்படும் சொற்பொருட்சுவை சந்தவமைப்புசங்கீத வாய்ப்பு தாளக்கணிப்பு முதலியனஅம்மம்ம! ஏதோ எமது உள்ளத்தையேகொள்ளை கொண்டு விட்டன. தற்போது தேனெனத் தித்திக்கும் தெலுங்கிசைக் கீர்த்தனங்களாய் ஐயரவர்கள் சாகித்யங்கள் ஒரு கடலிலமுதெனக் கிடைத்திருப்பவை அனைத்தும் சங்கீத சாத்திர முறை வழாதிசைப்பவல்ல வித்வ மணிகளின்

நாவினின்று நனி மிளிர்வன போன்று, இனி நம் அமிழ்தினு மினிய தமிழ் மொழியினும் அன்னார் நாவினின்று நயத்தற் கேற்ற பெற்றி இவர் பாக்களுக்கே அமையப் பெறினும் பெறுமென் றெண்ணி யாம் அகமகிழ்கின்றேமாக.

சித்தத்தைப் பக்திவழியிற்செலுத்தவல்ல இதுபோன்ற தொரு பக்திரஸ கீர்த்தனங்களுக்குமுன்னர் யாமெழுதியுள முகவுரையைப் படித்தறிந்தஒருசிலர் 'இதுவுஞ்சங்கநூலோ' என்று எம்மை வினவினர் கிணற்றுத்தவளை ஒரு குளத்துத் தவளையை நோக்கி நமது குளம் இக்கிணற்றி லும் பெரிதோ எனக்குதித்தாங்கு இவர் வினவியதற்கு யாம் 'அச்சங்க நூலுக்குக் கடவுள் அங்க அதிபதியாயிருந்து அதை நடத்தினர் இவ்விசை நூலுக்கோ அக்கடவுள் தசை வருந்த மண் சுமந்தும் புறம் வருந்தப் பிரம்படிகொண்டும் இராப்போது தூது நடந்தும் இருக்கின்றனராகவே நீவிர் மொழிந்த சங்கநூலினும் இது ஒரு படித்து உயர்வுடை யதே' என்று விடையிறுத்தனம். நிற்க, இனி இந்நூலா சிரியரான இவரிடத்திலிருந்து யாம் இறும்பூது கொள்ளத் தக்க விசேட மிரண்டுண்டு. அவை:—விரல்களினால் சுரக் கருவி (ஆர்மோனியம்) மீட்டி ஆங்கிருப்பார் மனத்துட் பேரானந்தப் பெருக்கோர் இருப்பாய்க்கொள்ளுமாறு வைத் தல் ஒன்று, தட்டுத் தடங்கலின்றித் தடதடவெனத் தண் ணீர்பட்டாங்கு இவர் தமிழ்ப் பாவினங்கள் பன்னலங் கவி னப் பாடுகின்ற விரைவு மற்றொன்று. இரண்டும் இரண்டு கண்ணெனத் தகும் இவை இரண்டும் இவர் இளம் பிராயத்தி லிருந்து முறையே கற்றுவந்த கல்வியின் திறமையினாலேயே வாய்த்தனவென்று துணிதலில் அடங்காது கடந்து செல்லு தல்பற்றி ஏதோ "தெய்வகடாட்சமும் கலந்திருத்தல்வேண் டும்" என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது.

இதுபற்றியே இற்றைக் கைந்தாண்டுகட்கு முன்னர் யாம் இவர் கவியெழுதுகிற விரைவுகண்டு வியப்படைந்து.

"கவிநயத்தில் கம்பர்வில்லி கழறுபுக ழேந்தியெனக்
கற்றோர் தேற்றம்.
புவிநயத்த புலவரெலாம் போற்றிடுவார் எமக்குமது
பொருந்து மேனும்
செவிநயத்த சாளிரச சுரக்ஞான சுந்தரஞ்சொல்
செந் தமிழ்ப்பா
நவில்பவர்தம் நாவினிக்கும் நனிமனது மினிக்குமிந்த்ய
நாடு மாதோ"

என்று இவரைப் புகழ்ந்தும் பாடியிருக்கின்றோம். ஆகவே,

"இவை அத்தனையும் ஒரு மிகையுறக் கூறியுளாரிவர் எனச்சிலர் கருதுவரென்பது யாமுணர்வேமாயினும் பின்னர் இவை அத்தனையும் ஒரு தகைவுறக் கூறியுளாரிவர்" என அன்னார் அறிந்துவக்கு மட்டும் அவர் மாட்டு யாமொரு பேதையெனப் பெறினும் பெருமையெனப் பெறுமாமென்ப.

வெண்பா.

எந்தவிதம் எத்தனைபேர் எத்தேடுத் தியம்பினுமே
சுந்தர! நின் சொற்பெருமை தோன்றிடுமோ—இந்தவிதம்
பட்டினத்துப் பிள்ளையின்மேற் பத்திநினக் குற்றமையான்
தொட்டணைத்துக் கொண்டதுகாண் தொண்டு.

இங்ஙனம்.

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை.

ஸ்ரீராமஜெயம்.

பஜன ஜீவாத்ருமிர்தமென்னும்

பக்திரசக்கீர்த்தனம்.

முதற்பாகம்.

விநாயகர் துதி.

சீராரும் பக்திரசக் கீர்த்தனங்கள் செந்தமிழிற்
சாரமுடன் யானெடுத்துச் சாற்றுதற்குப்—போரும்
அம்பிகையாள் முன்னெடுத்த வைங்கரத்துப் பிள்ளையொரு
தும்பிமுகன் றாளே துணை.

நம்பினேனுனையே என்ற வர்ணமெட்டு.

இராகம் கல்யாணி-தாளம் ரூபகம்.

பல்லவி.

தும்பிமாமுகனே எனைச்
சோதியாது பாது காவா (தும்)

மகுடங்கள்.

துணையே கருணா நிதியே கணநா யகநீ கதியே (தும்)
துரிதத்துடன் கனிபெற்றிட
வரனைத்திரு வலஞ்சுற்றிய (தும்)
துதிக்குமன் பருக்கரு ளுதித்திடுங் க்ருபை ப்ரபூ (தும்)

அநுபல்லவி.

உம்பர்போற்றி உரைத்திடும் நீப
ஓமெனும் பிரணவ சொரூப
நம்பினேன் மெஞ்ஞான தீப

நாடிட பக்திரசப்பதம்
நீடிட வைத்தருள் சத்திய (தும்)

சரணம்.

முக்கனிரச மோதகப்ரீய
முந்தும் பூஜை நெய்வேத்தியத் தூய
வக்ர தந்தம் வளங்கும் செவ்வாய

வாருடன் விக்னமகற்றிட
யோக சுலக்கண வித்தநி (தும்)

சுருதி பஞ்சமதொனி மிர்தங்க
துணையுறுந் தம்பூர் சுக சாரங்க
மருவுநாத சன்மார்க்க ப்ரசங்க

மங்கள சுந்தரனின் துதி
இங்கித பண்பு புனைந்தருள் (தும்)

சாரதாம்பிகை துதி.

திவ்வியசிங்காரி என்ற வர்ணமெட்டு.

இராகம் கல்யாணி—தாளம் ஆதி.

பல்லவி.

நித்தியகல்யாணி நீ காவா வாணி (நி)

அநுபல்லவி.

வித்வபூஷணி விளங்கும் யாழ்ப்பாணி
பத்மலோச்சனி பாதந்தந்தாள் (நி)

சரணம்.

சாரதாம்பிகா சங்கீத சுக
பாரதிமகா பாக்கியவை போக
காருண்யநிதியே கலைவாரிதியே
காவிய சுந்தரன்
பாமணங் கமழுறும் சுபகரி (நி)

மீனாம்பிகை துதி.

இமையபர்வத ராஜகுமாரீ என்ற வர்ணமெட்டு.

இராகம் காம்போதி—தாளம் ரூபகம்.

பல்லவி.

சுமங்களவை போகவாரி
தூயனும் சொக்கநாதன் பாரி

கமலபாதக் கதியருள் கூரி
காத்திடுவாயெனைக் கண்யபராபரி (சு)

கரியமாலெனுங் கண்ணன் சோதரி
கருணையானந்தக் கண்பார் தயாபரி
அரியமகுட சூடசம்மாரி
அம்பிகையே எனை யன்புடனாதரி (சு)

அழுதபிள்ளைக்குமட்டுந் தாயிரக்கமோ
அழத்தெரியாச்சேய் பசியைப்பொறுக்கமோ
குழவியின்சோகமன்னை முன்னிருக்குமோ
கொண்டவென் சிந்தனைக்கென்று செழிக்குமோ (சு)

உதய சூர்ய ப்ரகாசமுமுன்ன
ஓங்கிய தங்கக் கோபுரங்கள்மின்ன
துதிமதுரைச் சன்னி தானமுந்துன்ன
தொண்டனும் சுந்தரன் கண்டானந்தஞ்சொன்ன (சு)

ரேங்கரசகேளி என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

பல்லவி.

* தினகரகுலதே வதியே மீன
லோச்சனியே தாயே (தி)

---

*இதனைத் 'தினகர குலத்துத் தேவதியே' என்று நான்காம் வேற்றுமைப் பொருளில் விரித்துத் தினகரனாலே ஆக்ருஷிக் கப்பட்ட சர்வாண்டங்களுக்கும் தெய்வமானவளே என்று பொருள்கொள்க.

அநுபல்லவி.

அனவரதமு முந்தன்
அடியிணைதானே
அண்டினேனே நானே (தி)

தோகையரு.

மரகத மனோன்மணி திருமதுரையாளும் நன்
மகுடசிங்கார வீரி
மங்காதருள்புரி லிங்கேஸ்வரன் நித்யம்
மருவி விளையாடும் பாரி.

பாட்டெடுப்பு.

மதுரித சுந்தரன் தமிழ் மாலிகா
மானே தேனே யம்மா

மாருபல்கனயேமிரா என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

இராகம் ஆபோகி—தாளம் ஆதி.

பல்லவி.

தாயே மீனு தருணமிது காவா
தாள்போற்றினே னம்மா (தா)

அநுபல்லவி.

காயவோடம் கவிழ்ந்துவி ழுகாமுன்
கரை யேற்றுவா யென் (தா)

சரணம்.

விட்ட குறையோ வல்லாவிச் சென்மத்திலும்
தொட்டகுறையோ சொல்லாய்
கெட்ட பிள்ளையானாலும் சீர்திருத்த
நட்டமில்லை யெக்காலும் க்ருபாவிலாசத் (தா)

என் தந்தையாம் சொக்கரிடமே சொன்னாலும்
சம்மதிப்பதற் கிடமே
சிந்தனைசெய் சுந்தரன் துதியே
சிரோங்கு மரகதத் தாம்பே

ஆசிரிய விருத்தம்.

உள்ளன்பி லாநெஞ்ச வுறவுசத மென்றெண்ணி
யுளறிமெலி வுறுமடையனை
உத்தமர்க ணேயத்தை யுறவாடி யவர்நன்றி
யுண்மை தெரியா மடையனை
கள்ளமேகுடிகொண்டு பலபோதை யுண்கின்ற
கயவரைப் புகழ் மடையனைக்
கண்டபெண் காதலைக் கொண்டிடும் பொல்லாத
காமநோய் கொள் மடையனைத்
தெள்ளறிவி லாமலே துன்ப சங்கடமதிற்
சிக்கிவெம் பும் மடையனைத்

தீதற்ற சிவனடிமை யாஞேரை யெதிர்கண்டு
சிறிதும் பணியா மடையனைத்
தள்ளாம லினிவந்து தாஞள வேணுமென்
சரணாதுதி பெருகு தாயே
தரையிலுயர் பெருமைமிகு தமிழ்மதுரை யதனிலருள்
தருமரக தாய் மணியே.

ரேகுவம்சசுத என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

இராகம் கதனகுதூகலம்—தாளம் ஆதி.

பல்லவி

கதனகுதூ கலராகப்ரியே
கண்மணி மீனுக்ஷி காருண்யங்கடாட்சி

அநுபல்லவி

மதுராபுரி நிதிக்ரீடதாரி
மங்களந் ததும்புஞ் சம்ப்ரம்ம
அம்பிகா (க)

சரணம்

சந்ததமும்நானே சிந்தனை செய்தேனே
வந்தருள் செந்தேனே மைந்தன் நம்பினேனே
சுந்தரன் சதா
துதி பூஷணி
துவாரகா ஸ்ரீகண்ணன் சோதரித்ரி சூலி

(சிட்டா சுரத்திற்குச் சாஹித்யம்.)

தோரணையாகிய காரணஞானப
ராபரியே சமரசகுண சுபகர
சுரமுனிவர்கள் தொழும்
மாரகத மணியுன தழகிய பதமலரது கதியருள்புரி (க)

சொக்கநாதர் துதி.

ராம நாமமே தெய்வீக என்ற வர்ணமெட்டு.

இராகம் கேதாரகௌளம்—தாளம் ரூபகம்.

பல்லவி.

சோமசுந்தர சர்வேசா
தூயமங்கள தினந்துதி மதுரை (சோ)

மகுடங்கள்.

துடர்பவவினை பொடிபடவருள்
சடமிசை மகுட மணியுங்கடவுளே (சோ)
சுருதிபகா லிங்கச்சீ
ரதுபரவு துங்கச்சோ
பிதமருவு மெங்கள்தா
யகவிரத பாமபதியே (சோ)

துலங்குமிங் கிதம்பெறுஞ் சதங்கைபொன் பதந்துணையருள்
சோதித்து வாதிப்ப தேனிது
நீதிக்குத் தானொப்பு மோபுகல் (சோ)

அநுபல்லவி.

தேமிகுந்திட நால்வர் மகிழ்ந்து
தேவாரப்பாசுரதுதி நாவாரப்பேசியகதியருள் (சோ)

சரணம்.

என்றுந் துதிசெய்தேனே நெடுநாளாய்
என்முறையைச்சற் றிரங்கி நீ கேளாய்
நன்று சுந்தரன் நம்பிக்கையாளாய்
நாதசங்கீத விநோத சுபோதத
யாநிதியே நலமருள் (சோ)

மதனசர மழையதனி லேனைவிட என்ற வர்ணமெட்டு.

இராகம் சங்கராபரணம்—தாளம் சாப்பு.

பல்லவி.

துதிமொழியுந்திரு மதுரைதனிலுறை
துங்கமே சொக்க லிங்கமே யருள் (து)

அநுபல்லவி.

கதிதருக வுந்தன் பதந்துணையன் றியான்
காண்கிலேன் தமிழ் மாண்பரோதிய (து)

சரணம்.

தினகாகுல மகுடா மணிகா
தேவிபாகவை போகம் நீடியே
திகழ் சதுர்மறையின் புகழ்மருவியவி
சேட திருவிளை யாடலாடியே

வினைகளையவெகு புனிதமுதவிய
விமலவிருதய கமலமலரதில்

வேதனையணுகாமலு முனதொரு
ஊழியம்மறவாமலு மனுதினம்
நீதர்களினிதாகவே தசவித
நாதமுற சங்கீத விநோதமாய்த் (து)

திடமுடனே நட மிடுகடவுளேயென்
மிடி பொடிபட நின் அடியிணை நம்பினேன்
மடையன் மதியிலாக் கடையன் பலவித
இடையூறுகளில்கிடந்துடலும் வெம்பினேன்
கொடியவனனலும் அடிமைபுகுமெனைக்
கொண்டணைத்திட லன்றோ உத்தமம்

கூருங்கரு ணனந்தம் பொழி
சாரும்பரனே சுந்தரன் மகிழ்
கோரும் பொருளே எங்கிலும் நய
பேரின்பமுதே மங்கள ஜெய (து)

கநிகரமுஞ்சி என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

இராகம் காப்பி—தாளம் ஆதி.

பல்லவி.

பரமதயாள பனிமலர்த்தாள
பருவதராஜபுத்ரி மருவுமணுள (ப)

அநுபல்லவி.

சுரமுனிவர்கள் தொழும்
சுலோக சாணுலயத்
தூய கங்காளநாத வேழைபங்காள நீத (ப)

சரணம்.

விந்தையுறும் மகா மேருவில்வாச
வேதாகமத்தில் நன்கு விளங்கும் ப்ரகாச
கந்தர் வகான கவச குண்டலதார
காவிய சுந்தர சங்கீத விநோதஹார (ப)

ஸ்ரீராமபாதமா என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

பல்லவி.

சோமேஸ்வராஹர ஜோதிஜடாதர
தூயகுணக்ருபாகர சுவாமி (சோ)

அநுபல்லவி.

இராமேஸ்வராஹர ஞானசுஜீதர
நம்பினேனுன்பாதமலர்
தந்தருள் தாரதர (சோ)

சரணம்.

சந்ததமுந் தொண்டர்கள்
சாற்றிடும் துதியே
சத்துசித்தானந்தங்கொள்
சரஸ்வதி நிதியே
சுந்தரன் செந்தமிழ் சோபிதமுங்கமழ்
சூடதீபீத தேவ ஜேசிவ ஜெபதப (சோ)

அபராதமுலு நீவுமன்னிஞ்சி என்ற வர்ணமெட்டு.

இராகம் லத்தாங்கி—தாளம் ஆதி.

பல்லவி.

சரணகதி யடியேன் சதானின்
சதமென்று நம்பிச்
சார்ந்தேன் பேரின்பச் (ச)

அநுபல்லவி.

தரைமீதிலென் தாய்போலத் தாங்கி
ததிவந்தருளே நிதிசேர் பரம்பொருளே (ச)

சரணம்.

சீர்பொருந்த நோக்கி சிந்தாகுலம் நீக்கி
பூர்வகன்மம் போக்கி புனிதமுண்டாக்கி
வார்பெரும் சுக வாழ்வுதரவேண்டும்
வணங்கும் சுந்தரன் குணங்கள் விளங்குமுயர் (ச)

சங்கல்பமே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பஞ்சாக்ஷர பரமநிதியே
பகருஞ்சுந்தரன் பஜனனந்தக்கடவுளே (ப)

அநுபல்லவி.

வெஞ்சீர் கடல் விளம்பும் பேரின்பம்
விண்ணவர்க்கமுதாய்த் தந்த விமலனே (ப)

சரணம்.

பக்தர்கள் நிமித்தம் பார்மீதுமேவி
சற்குணதயாளம் சமர்ப்பித்தனே யன்றோ
நத்திடுந்தொண்டரில் நானொருவன்தானே
நன்றி செய்யா தென்னவர்மம் நவிலுவாய் (ப)

என்னகேள்வி முறை என்ற வர்ணமெட்டு.

இராகம்-பிலகரி—தாளம் ரூபகம்.

சங்கரசிவா தேவ
சமயமீ தென்னை யாளவே நீவாவா (ச)

அநுபல்லவி.

கங்காள வேழை பங்காள கடைக்
கண்பாராய் கருணை சொரூப (ச)

சரணம்.

நாரைக்கு முத்தியைத் தந்ததயாளா
நம்பினேனுன்னை நான்வெகுநாளா
நாடி யேதுதி பாடி னேன்திருக் கூடல்
நற்பதி கற்பக (ச)

தாயிழந்த பன்றிக் குட்டிகளுக்காகத்
தாய்போலுஞ் சென்று பால்தந்தவிவேக
தாரா தாரவு தாரா வீரகெம்பீரா
தாளிணையே கதி (ச)

நரியைப் பரியாக்கி நலந்தாவில்லையா
நானதிலுங் கடையனோ நீ சொல்லையா
நாதா சுந்தரன் கீதா வந்தருள் நீதா
நவில்புனிதகதியே (ச)

முருகபிரான் துதி.

சின்னநாட்டனு என்ற வர்ணமெட்டு.

இராகம் கரகரப்ரீயா—தாளம் ஆதி.

பல்லவி.

சண்முகா குகா சாக்ஷாத்
சரவணபவ சிவ (ச)

அநுபல்லவி.

கண்முன் பாரையா கலியுகமெய்யா
காக்க நீயல்லால் கதியேது சொல்லாய் (ச)

சரணம்.

அந்தரர் கொண்டாடும்
ஆனந்தத் தேவே
அண்டினோர்க்கெஞ் ஞான்றும்
அருள்செல்வக் கோவே
சுந்தரன் விசாலா துதிக்கனுகூலா
துளபமார்பன்மருகா வளருஞ்செந்தூர்முருகா (ச)

ஏழைமேலின்னும் வர்மமா என்ற வர்ணமெட்டு.

இராகம் நாட்டைக்குறிஞ்சி—தாளம் ஆதி.

பல்லவி.

சூலபாணி சுதா சோபிதா
சுபகர சுடர்வடி வேலாயுத சாமி (சூ)

அநுபல்லவி.

ஆலிலேசயன மாலின் மருகனே
அப்பாநின் பொற்றாமரைப்பாதம் நத்திநின்றேன் (சூ)

சரணம்.

ஆறுதலேயுடன் தேறுதலேசொல
ஆடுமயில்மிசை வரவேணும்
தேறிவலமிடு தேசிகாமணியே
செங்தேன் தமிழோது
சுந்தரன் நம்புமெங்கள் (சூ)

சனித்தோடித்யவே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

இனிப்போத மருள்வாய்
என்பாலி ரங்கி (இனி)

அநுபல்லவி.

தினைப்புனத் துணைக்கவண்
செலுத்துமக் குறக்கனி
மனத்தகச்சுய வரமளித்தவித்தகா குகா (இனி)

சரணம்.

இறப்பதும் பிறப்பதும் எடுத்தஜென்மத்தின்முறை
இகத்தில் மாயாவினேத இருளெனுமொருகுறை

மறைப்பதை யகற்றியுன் மாட்சிகண் காட்சிபெற
மதுரிதம் பொழி செஞ்சொல்
துதிசுந்தரன் நம்பினேன் (இனி)

தன்மனக்குருபரன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

மாகத மயில்மீ தேறியே வருவாய்
மால்மருகா முருகா விரைவாய் நீ (மா)

அநுபல்லவி.

சரவணபவனே ப்ரணவசொருபனே
சர்ஜ்சன சற்குரு
தற்பர தற்பத (மா)

சரணம்.

குறையொன்று கேளாய் சிறுவனையாளாய்
கோலாகலனே வேலாயுதனே
கோமளதேக விவேக வைபோகனே
குதித்துத் தாவி எதிர்த்த சூரர்
குலத்தைச்சீறி மடித்தத் தேவ (மா)

ஆனந்தம்நித் யானந்தந்
தானந்தங்கண் டானந்தங்கொள்
ஆனந்தம்பர மானந்தம்பெற

அன்பனே உந்தனைச் சுந்தரன்
நம்பினேன் (மா)

தேவா என்ற மெட்டு.

பல்லவி.

வா வா கார்த்திகா செழும்
மாரகத மயில்மிசை தருணமென்னுமுனம் (வா)

அநுபல்லவி.

பூவிலிவ் வாழ்வு பொய்யன்றோ தாழ்வு
புனிதம்பெற பூஜித்தேன் புகழ்கடம்பனே
மகிழ்திடம் தந்தருள (வா)

சரணம்.

தஞ்சமுன்பாதம் சாற்றிடும் போதம்
தண்டமிழ்ப்பதமே சுந்தரன்
ஸ்தாபன பக்திச் சித்தச்
சோக மகற்ற விச்சுபதினத்தில் (வா)

வருவாயே வடமாலீ என்ற வர்ணமெட்டு.

இராகம் பைரவி—தாளம் ரூபகம்.

பல்லவி.

வருவாய் மால் மருகோனே
வணங்கும் குணங்கள்
விளங்கும் சீமனே (வரு)

அநுபல்லவி.

சரணுகதி தாமரைப்பாதம்
தந்தாளுவாய் திருச் செந்தூரில் வாழ்பவ (வரு)

சரணம்.

சுரமுனி யொருகனி தாமுனம்
அரன்மொழி பகர்ஜெய முறக்கனி
நானே பெறுவேனே யெனக்
கரிமுகன் திறமறியவே யுல
கரை நொடிதனில் வலமிடுவெகு
வேகமுற்றி சைந்தமயில்
வாகனத் தமர்ந்திவ்வேளை (வரு)

முடுகு.

வானுலகோர் பயமுறவே
வாருதி போலெதிர் சூரர்கள்
கூடியவர் கோடிபடை
கூவியே தரை மீதினிற் பொடி
பேறல்விழ வேல்கொடு வீசிய
வெற்றியென்றிசைந்து தேவர்
சித்தமுங்குளிர்ந்து லாவத்
திறந்தந்த வேல்கரனே
வரம்பொங்கிவாழ்பரனே

தினந்தொண்டர் தொழவருமுயர்
கனங்கொண்ட தொருகடவுளே
புனஞ்சென்று குறமகளி னெவ்
வனங்கண்டு மருவிய முரு

கப்பா ஏழைமீது ஏனிந்த வாது
ஒப்பில்லாத சுப்ர மண்யாவிப்போது
இப்படி என்னைச் சோதித்தால் மண்மீது
எப்படிமென்மேல்பொறுப்பேன் நீயோது

உத்தம பக்தர்க ளுக்கெழில்
முத்திய ளித்திடு சத்திவ
ரத்தினு தித்தம குத்துவ
வித்துவ கர்த்தனே யற்புதப்

பாவை குஞ்சரிக்கு மோக
பாகு செஞ்சொலுக்கு யூக
சேவை சந்தகங் கொடுப்பாய்
சேயன் சுந்தரன் துதித்தேன். (வரு)

ஞானதேசிக முருக என்ற வர்ணமெட்டு.

இராகம் தோடி—தாளம் ரூபகம்.

பல்லவி.

வேள்விமலையில் வீற்றிருப்பவா உன்னை
வேண்டினேன் வந்தருள் ஆண்டவா சற்குரு (வே)

அநுபல்லவி.

காளைவாகனக் கடவுள் குமரா
காருண்யனையருள் கர்த்தா கண்பாராய்
தோளிற் கடம்ப மாலை யலங்காரா
தோகைமயூர மேலேறியவ வேடுவகுல
மாதுமணுகராகியவ தேவர்கள்தொழு
யோகவைபோக மகானுப சரவணபவ
கந்தப்பா மதுரிதத்தமிழ்ச் சங்கத்தார் புகழுனதிரு
செம்பொற்றுளடியிணை தினங்கும்பிட்டோதிய சுந்தரன்
தோத்திரக் கீர்த்தனை நேர்த்தி
பிரார்த்தனைக்ஷேத்திரக் கீர்த்தியே
காத்தருள் கார்த்திகை மூர்த்தியே
பூர்த்தி நெய்வேத்ய தீவார்த்தனை (வே)

பக்தி முயற்சி.

ஆனந்தமானந்த மானந்தமே என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ஏகம்.

பல்லவி.

கோருங்கள் கோருங்கள் கோருங்களே துதி
கூறுங்கள் கூறுங்கள் கூறுங்களே நின்று (கோ)

அநுபல்லவி.

கூவுங்கொடி சேவலனே
தேவர் படைக்காவலனே துதி (கோ)

சரணம்.

பாருங்கள் மானிட தேகஞ் சந்தேகம்
பற்பலரால் நீவிர் கண்டனுபோகம்
தேருங்கள் புண்ய நிதிபெரும்பாகம்
திருமுருகக் கடவுளடிக்
கிருபை பெறக் கருதிமிக்க (கோ)

யாவபுண்யமிவ் விரண்டும் நம்மோடே
பஞ்சபூதத்தாற் பயின்றதிக்கூடே
ஆவிபோனலோ மகாவெட்கக்கேடே
அதிமதுரக் கிளிவசனப்
பரிமளசற் குருமணியைக் (கோ)

ஆதியிற் பட்டினச் சாமிசொலிதே
ஆரிருந்தென்ன நமன் வரும்போதே
காதற்ற வூசியுங் கூடவராதே
கண்டிடுவீர் தண்டமிழ்சொற்
கொண்டநிதிப் பண்டிதனைக் (கோ)

பொல்லாத லோபியர் கைப்பொருள்போலே
பூமியில் நாமிருந் தென்ன மென்மேலே
எல்லாமவன் செய லென்றெண்ணினலே
இருட்டில் விளக்கை
எதற்கு வகித்தோம் (கோ)

செந்தமிழ்ச் சுந்தரன் கீதப்ரசாரம்
செப்பிய பக்தி முயற்சியாதாரம்
சிந்தாகூலந் தவிர்க் கின்றவுதாரம்

திரிகரணப் பரிவுடன்மெய்த்
தருமநிதிக் குணபதியைக் (கோ)

இந்நேரத்தி லென்னாலேகூடாதேழுந்தருளும் என்றமெட்டு.

இராகம் எதுகுலகாம்போதி—தாளம் ரூபகம்.

பல்லவி.

சூலாயுதன் பாலா சுபகச்
சுப்ரமண்யனே பண்பாய்க் கண்பாரையா (சூ)

அநுபல்லவி.

மாலார் புய வள்ளி மனோகரா
மாமணியே இன்னுந் தாமதமேனையா (சூ)

சரணம்.

மண்ணிற் பிறந்து சன்மார்க்க முணர்ந்தவோர்
மாண்பரையண்டிலேனே வீணாக
மத்தம் பிடித்து மயங்கினேனல்லாது
மற்றேதும் கண்டிலேனே மெஞ்ஞானக்
கண்விழித்தோர்காணும் காருண்யரூபனே
கற்பனைக்கெட்டாத விப்புவி வியாபனே (சூ)

பக்தி மனத்தோடு நித்தமுன்பஜனை
பாடிப்பணிந் தறியேன் கண்ணைக்கும்
பக்குவப் பெண்களின் நர்த்தனமென்றாலோ
பக்ஷம்விட்டுப் பரியே னிம்மூடன்
துர்க்குணம் விட்டென்று தூயம்பெறுவேனோ
சொல்முருகா இன்னும் சோதிப்பதேனோ (சூ)

கற்றவித்தை கடுகளவேயானாலும்
காட்டினேன் வீண்மமதை அவ்வாறு
காட்டியதா லென்ன மூட்டை கட்டிக்கொண்டேன்
காமத்திலே பொழுதை இழந்திடச்
சுற்றித்திரிந்து நான் பட்டபெரும்பாடு
சுட்டிக் குறிக்கப்போதுமோ வண்டியேடு (சூ)

போனதுபோகட்டு மினியாகிலும் நற்
போதம் பெறுவதற்கே யாளாகுவேன்
பொல்லா வினைகளகற்றியே ஜென்மப்
புனிதந் தருவதற்கு—இந்நாளிலே
ஞானகுருவாய் வரவேணுமாக
நம்புஞ் சுந்தரன் நவின்ற வைபோகச் (சூ)

பக்தியா கேளிலா என்ற வர்ணமெட்டு.

இராகம் ஆனந்தபைரவி—தாளம் ஆதி.

(இதை அக்ஷர காலமாகவும் பாடலாம்)

பல்லவி.

பக்தி கொண்டாடுவோம் அனுதினம் (பக்தி)

மகுடங்கள்.

(சமம்) பகரிரு வினையகலவே யிகபரசுகம்
பெறஹர கர சரவணபவனென (பக்தி)

(சமம்) பரங்குன்றில் தினந்தொண்டர் சரண்கொண்ட
பரமனருட் குமர முருகனைப் (பக்தி)

(விஷமம்) பவசாகரத்திலே கிடந்து
தவியா விதத்திலே தொடர்ந்து (பக்தி)

(சமம்) பாதப்புவி மினுசுகிர்தச்
சமரச விரதப்பரிவுடன் (பக்தி)

(சமம்) பஞ்சவச்சுதிக லந்திடச்சுரல
யங்களூற்றிலகு பண்படித்துப் (பக்தி)

(விஷமம்) பகையவர் நடுங்கும் ஜெயவலமிடுந்திண்
புயமணி கடம்பன் (பக்தி)

(சமம்) பட்டினத்துறவி சுக்லமுற்பவிவி
சித்திரக்கவிதி ருப்புகழதின் (பக்தி)

(விஷமம்) பண்பென்றுந் தங்குஞ் சொந்தன்
கந்தன்றன் இன்பம் பொங்கிய (பக்தி)

(சமம்) பருவத ராஜபுத்ரி யருளிய வேல்பிடித்த
அறுமுக நாதனைப் (பக்தி)

அநுபல்லவி.

சித்தர் பொதியைமலை த்யானங் கமழும்நிதி
சீர்த்தி கார்த்திகேய மூர்த்தி பிரார்த்தனைகொள்
நேர்த்தி நிர்மய
நீத தம்பிரான் பொற்பாத (பக்தி)

சரணம்.

நிகழும்லோக வாழ்விது சத மெனவனு
தினமும் வீணில் மாதராசை பெருகியே
வெகுவிரோத லோபி நாம விமரிசை
விளையும்பாழும் மாய்கை சூழு மிடியுற
அகமும்வாடி நோய்களாலே மெலியவு
மமுதம் வாயிலே கிடாது ஒழிகியே
வகையிலாது சேய்களோடு மனைவியும்
கதறிவீழநாடி பேதகணமதில்
நமனும் வந்துயிரைக் கவரவும் பிணமாய்ச்
சுடலையண்டி நம துடலும் வெந்தழியும்
நாளிலே நம்
(ராகவிஸ்தாரத்தோடு பாடவும்)
நாடுமெங்கே பெரிய வீடுமெங்கே
பெற்ற மக்களெங்கே வைத்த ரொக்கமெங்கே
சொந்ததேவியெங்கே கொத்து சாவியெங்கே

ஏறும் மோட்டாரெங்கே நல்ல பீட்டனெங்கே
பூந்தோட்டமெங்கே நேயர் கூட்டமெங்கே
பூசும் மணமுமெங்கே சுவை யுணவுமெங்கே
போதை வஸ்துமெங்கே தின்ற மஸ்துமெங்கே
ஷோக்கு நடைகளெங்கே கட்டும் உடைகளெங்கே
பஞ்சு மெத்தையெங்கே லேடி முத்தமெங்கே
காப்பு நன்செயெங்கே தோப்புப் புன்செயெங்கே

(பாட்டு)

நாடிவருவதேது பாவபுண்யமல்லாது
நாமரையிலணியுங் கோவணமும் வாராது
நன்று சுந்தரன் புகன்ற செஞ்சொ லிங்கிதந் ததும்பும்
நாகரீக மாமயில் பாகன் யோகன்
பரிமள தேகன் யூகன் திராவிட
நட்புமிக்க வைத்தபுத்தேள் வித்வ பொக்ஷ
சக்ரவர்த்தி.
நயமுற்றிட க்ருபை நாட்டும்
அருளமுதூட்டும் பதவிகாட்டும் (பக்தி)

தயசூசுடகதிவே என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

பல்லவி.

மயில் வாகன மதில்வா குற
மகள் மோகன முருகா வருள்தா (மயி)

அநுபல்லவி.

வயல்சூழ் பரங்கிரிவாழ் கலி
வாத விரத சுக வாமி யோக பால மரகத (மயி)

சரணம்.

உன்னையே சதமெனவே யென
துளமதி லுறுதியாய்க் கருதினேனே
ஜனரஞ்சிதத் தமிழ்ச்சுந்தர
த்யானகீத ஞான யேல ஞால மீது மரகத (மயி)

நெஞ்சிற்குணர்வு.

நம்பினேனுன்னையே என்ற வர்ணமெட்டு.

இராகம் கல்யாணி—தாளம் ரூபகம்.

பல்லவி.

நெஞ்சேயஞ்சாதிரு நன்
நீதவேத நாயகன் கீதப்படி

கண்ணிகள்.

பஞ்ச பூதங்களை மிஞ்சவிடாதே
பக்தி வைராக்யப் பயிற்சி கெடாதே
லஞ்சத்தை எண்ணி லோபியை நாடாதே
லஜ்ஜையற்றோரிடம் லௌகீகம் கூடாதே (நெஞ்)

எண்பத்தி நான்கு லக்ஷஜீவராசி
ஏற்கு முனந்தஞ்ச மெதுவென்றுயோசி
புண்பட்டு நீயேன் புலம்புகிறாய்கூசி
பூமியிலே திடச் சோபிதம்பேசி (நெஞ்)

இன்ப துன்ப மனுபவியா தாரு
ஏக நாயகனல்லாது நீ தேரு
பன்முறையாகப் பகர்ந்திட்ட சீரு
பாங்கில் நடப்பதே யோங்கிய பேரு (நெஞ்)

சோற்றாலமைத்த சுவர்வீழுநாடி
சூக்குமமாய்நிற்குஞ் சொரூபந்தேடி
போற்றுவாய்சுந்தரன் போதங்கொண்டாடி
பொய்யாத வாழ்விற் புகுதலாங்கூடி (நெஞ்)

கோருங்கள் கோருங்கள் கோருங்களே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே பர
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

அநுபல்லவி.

அப்பனது தரிசனமே
ஒப்பிலாத பரிசனமே—கண்டிட (ஆன)

சரணங்கள்.

தேனபிஷேகம் விபூதிப்ரசாதம்
தெண்டாயுதன் சந்நி தானம்விநோதம்
நானிலமீதில் தருஞானபோதம்
நண்பர்கள் கும்பிடுந் தம்பிரான் பாதம் (ஆன)

காவடியாக வருங்கோடாகோடி
கந்தனிருக்குங் கோவில்தனை நாடி
தேவடியார்கள் தினந்துதி பாடி
தித்தித்தோமென்றாடு வார்களம்மாடி (ஆன)

சங்கு சேகண்டி நாகசுரவாத்யம்
சண்முகனுக்கு அர்ச்சனை நெய்வேத்யம்
தங்கமானகுகன் யாவர்க்கும் பாத்யம்
தன்மையை யாதென்று சொல்ல அசாத்யம் (ஆன)

காத்து ரட்சிக்கும் கண்ய முருகையன்
கானமயிலேறி வரும் நமதையன்
தோத்திரஞ்செய்கின்ற தொண்டர்க்குமெய்யன்
தோகை வள்ளியை மருவிடுந்துய்யன் (ஆன)

செந்தமிழ்ச் சுந்தரன் சாற்றுயாமாலை
தேனமுதுண்டிடும் சேய்க்குகன்மேலே
சந்தனக்காப்புத் தீவார்த்தனைவேலே
சர்க்கரைப் பந்தலில் தேன்பெய்தாப்போலே (ஆன)

(யாலளு தயநி காமநி என்ற கீர்த்தனை வர்ணமெட்டு)

இராகம் பைரவி—தாளம் ஆதி.

பல்லவி.

பரங்குன்றில் விளங்குங் குகா

அநுபல்லவி.

விரும்பும் பேரின்பம்
ததும்பும் பதியெனவளர் திருப் (பர)

சரணம்.

அம்பிகையின் சேயா
அருள்புரியுந் தூயா
அண்டினேன் தொண்டர்கள்
என்றும் அருள்பெறு முயர் திருப் (பர)

விண்ணவர்க்கா தாரா
வெற்றிகொளும் தீரா
வேலா விசாலா
நுகூலு விமரிசைமிகு திருப் (பர)

சுந்தரன்சொல் நேமா
தோத்திரங்கொள் பூமா
சூரசம்மார கெம்பீர
சுபகா நிரை திருப் (பர)

சாமியை நீ கூட்டிவா சகியே என்ற வர்ணமெட்டு.

இராகம் காம்போதி—தாளம் ரூபகம்.

பல்லவி.

முருகனிட மென் முறை சொல்வாய் கிளியே (முரு)

மகுடங்கள்.

முழங்குநிதி செழும்பழநி
இளங்குமர னெனும்பிரபல திரு (முரு)

முற்றும்முனை நம்பியவொரு
பக்தன்சொலும் சங்கதியென அந்த (முரு)

முகநகையுற வகமகிழ்திருப்
புகழுரையதி லொருவரிமருவியே (முரு)

முப்பிறப்பில் கொண்டவினை மூண்டிருந்தா
லிப்பிறப்பி லண்டிடாமல் வேண்டுவதாய் (முரு)

மூடமதி யாலே பொல்லா மாதர்களை
நாடியுடல் வாடியுள்ளம் வேதனையானதாலே (முரு)

முக்கியமிது பற்பல துயர்
பற்றுவதுச கித்திட வசமல்ல (முரு)

அநுபல்லவி.

விரிதருமுலகோர் புகழ்திரு
விளையாடல் மதுரையில் (முரு)

திருநாளைப் பெறுபவள்புதல்வனும்
முத்தர் போற்றும்
இப்ரபஞ்சநிதி சுப்ரமண்யனெனும் (முரு)

சரணம்.

நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும்
நுண்ணறிவுந் தவப் புண்ணியஞ்சாரவும்
தூயவென் தாய்மனத் துக்க மகற்றவும்
தூது நீயே இனிவேறில்லை
தொண்டன் சுந்தரன் சந்ததம்
துதித்தேன் மதித்தேன்
பட்டணத்து செட்டிசுக்ல
முற்பவித்த வித்வ புத்ர
விதரணகுண நய வருணகிரியே (முரு)

முருகன் திருமால் மருகன் பெருமை என்ற வர்ணமெட்டு.

இராகம் அடாணா—தாளம் ரூபகம்.

பல்லவி.

முருகா திருமால் மருகா வருக திரு
மூர்த்திகளின் ஞான நேத்திர மாகிய (முரு)

மகுடங்கள்.

முற்பவ முற்று மகற்றிப்
பொற்பத பக்தி யெனக்கருள் (முரு)
மோகனக்குற மாதுபொற்றன
பாகசத்திவே லாயுதக் குகா (முரு)
முந்தூர் கடவுள் விநாயக
ரின்பண் புறையுஞ் சகோதரா (முரு)

அநுபல்லவி.

உருகாதோ உன்னுளத்தில் வஞ்சமேன்
உலகந்தனி லுனையன்றியே
துணை ஒன்றிலை துதிரஞ்சித (முரு)

சரணம்.

சந்ததமுந் தொண்டர் பங்கிலிருந்திடுஞ்
சற்குணச் சண்முகனே அந்தச்
சங்கரனுக்கு முன் தானுப தேசித்த
சம்பன்ன தேசிகனே
செந்தமிழ்ச்சந்த வருண கிரியின்
திருப்புகழ் பொற்பகனே புகழ்
தென்னன்பிள்ளைக்கே யருமைச்செயனெனச்
செப்பிடும் கற்பகனே

கந்தா கடம்பங் கமழுஞ் செந்தூர
காவிய சுந்தரன் பாவலங்கார
மந்தகாசத்தோகை மாமயில் வீர

மகிமைக்கலீ வரதச்சுக
விரதக்குரு மணிரத்தின (முரு)

மானிட வாழ்வின் நிலே.

உனது பாதாம்புயமலாது என்ற மெட்டு.

இராகம் சங்கராபரணம்—தாளம் ரூபகம்.

பல்லவி.

கனவு போலாம் மனிதர் வாழ்வு
காணூர் காணூர் வெறுங் (கண)

சுருடங்கள்.

கனகநிதிமண் மனைவிதனையர்
அனைவ ருறவது (கன)

காதலுற்பவி யேகொடுத்திடு
மாதொருத்தியின் லீலையற்புத (கன)

காதகத்தி லேகிடத்தும் ஞானமற்ற
சாதகத்தி லேநடக்கும் மாயவித்தைக் (கன)

அநுபல்லவி.

தினையளவாம் சிற்றின்ப விமானம்
தீர்க்கவாலோசித்துப் பார்ப்பதே ஞானம் (கன)

சரணம்.

அம்ஸம் என்றும் வாசி யோடும் சகாயம்
அப்புப்ருதிவுதேயு வாயு வாகாயம்
பொம்மை போலாட்டி வைக்குஞ்சம்ப்ரதாயம்
போட்டுவிட்டே யோடிப் போய்விடும் மாயம் (கன)

தோல் நரம்பெலும்பு சுக்ல சுரோணிதம்
சோற்றுப் பருக்கையால் தோற்றும் வினோதம்
கோலூன்றுங் கப்பலிதற் குண்டு மாமதம்
கூற்றுவனென்ற ஓர் காற்றுக்கஹோதம் (கன)

சப்தபரிசரூ பரச கந்தம்
தன்னில் வேதாந்த ரகஸ்யமானந்தம்
அப்பொருள்காண்போர்க்கேமெய்ப்பொருள்சொந்தம்
அன்பனும் சுந்தரன் விண்டமாயாபந்தம் (கன)

துமேசர்தாரே ஹலம்க்ய என்ற வர்ணமெட்டு.

இராகம் தேசிகம்—தாளம் ஆதி.

பல்லவி.

உமாதேவி சுசீலநல் ஓம்ப்ரணவ குகாயோக
சமானமே யிலாக் கண்யா சர்வதிகாரபுண்ய (உமா)

அநுபல்லவி.

சமானந்த நிதிதந்தாள்
சாற்றிடும் தோத்திரப்ரீதி
சத்யமா ரூக்ருபா நிதி (உமா)

தொகையரு.

சைவ சித்தாந்த வேதாந்த
சமரச சன்மார்க்க நீதிநூலா
வளரும்பரார்க்கருள் வஜ்ரப்ரதாப வேலா

பாட்டெடுப்பு.

வளர்தமிழ்ச் சுந்தரன் நேயா
வாஞ்சை கொண்டாடிடுந்தூயா (உமா)

நினுர்ஞ்சினு என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

பல்லவி.

மனோன் மாமணி சுத மரகத
மயில்வாக நீத சுபோத (மனோ)

அநுபல்லவி.

வினோத சங்கீத விதரண குணா
விதத்தகா நத்தினே னருள் (மனோ)

சரணம்.

கணநாதசகோ தரமுருகா
கருணாகர சரவண பவகுக

குணாதிசய குருவே கோரும் துணைவா
சுந்தரன் கூறிடுந்துதி (மனே)

செந்தூர் வேலாண்டி என்ற வர்ணமெட்டு.
இராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி.

பல்லவி.

பழனிமலையாண்டி உன்
பாதம்வேண்டி (பழ)

அநுபல்லவி.

பாதம்வேண்டி நின் ப்ரசாதம்வேண்டிப்
பணிந்தேன் (பழ)

தொகையறு.

கழனிசூழ்சோலை நீர்வளம் நிறைந்தபூமி
நிகரில் நின்நகரே யாகும்
எளியவற் கெந்தநாளும் இகபரசுகமேதந்து
இரட்சிக்கும் ஸ்தலமுமாகும் (பழ)

ஈராறு செவியிருந்தும் என்முறையைச்சற்றும்
ஏலாமலிருப்பதழகோ தெய்வ
சூரசம்மாரனே சுப்ரமண்யனே
சுந்தரன் போற்றிடும் மெஞ்ஞானச் சைவ (பழ)

உச்சிதமாய் விளங்கும் பச்சைக்கலாபமயில் என்ற மெட்டு.

பல்லவி.

ஈடேறவோர் மார்க்கஞ் சொல்லையா
ஈராறுகையா (ஈடே)

அநுபல்லவி.

நாடோறும் நின்பதத்தை
நாடாமலே கழித்தேன்
நானிலத்தினி லேபவப்பிணி
தானகற்றிடுமெஞ் ஞானம்பெற்றுநான் (ஈடே)

சரணம்.

கெம்பீர சேட்டைமிகும்
வம்பாளர் கூட்டுறவால்
கேவலப்பயல் தானெனப்பல
பேர்நகைக்கவி டாதுபக்தியில் (ஈடே)

ஊரூராய் நாடகத்தி
லாடாடியே சலித்தேன்
ஓதுதற்கரி தானமெய்க்கதிர்
காமநற்பதி வாழும்தற்பரா (ஈடே)

பந்துவர்க் கங்களெல்லாம்
தந்தால் மகிழ்ச்சிசொல்லிப்
படைப்பர் நல்விருந்து அல்லால் முகம்
கடுப்பரே விரைந்து பொறுப்புடன் (ஈடே)

கற்றேன் சிறியவித்தை
பெற்றேன் பெருங்கர்வத்தை
காட்டிவீண்வினை யாட்டிலேபுக
மாட்டேனேயினி மேட்டிமையுடன் (ஈடே)

ஆதார மாகவுந்தன்
பாதார மேபணிந்தேன்
அந்தமிகுசு கந்தனே துதி
சுந்தரனது சிந்தனையினி (ஈடே)

மதுரகானமிர்து வசனி என்ற வர்ணமெட்டு.
இராகம் சுருட்டி—தாளம் ஆதி.
பல்லவி.

தயவில்லாதனெ தன வஞ்சம் இது
தானோ தெய்வநெஞ்சம் கொஞ்சமும் (த)

அநுபல்லவி.

கயிலை நாதனருள் சுதனே என்
கவலைதீரவே மயிலின்மீதிலே
கணந்தனி லிணங்கிவந் தருள்செய (த)

சரணம்.

ஆதரவுனையன்றி அவனியிலேது
அந்தரமர்மமதை அடியனுக்கோது

சோதனை செய்திடலாமா புகழ்
சுந்தரன்துதி செந்திலம்பதி
துலங்கு மங்களம் பெறுங்குமரனே (த)

முருகனிடமேன்முறை சொல்வாய் கிளியே என்ற மெட்டு.

இராகம் காம்போதி—தாளம் ரூபகம்.

பல்லவி.

பக்தியோடு பஜனை பாடுவோம்
பரங்கிரிக் குமரனை (பக்)

சரணங்கள்.

பஞ்சமச் சுரங்களொப்ப
கொஞ்சுமத் தளம்தொனிக்க (பக்)

பரிபூரண கருணாகர
குருமாமணி குமாரவேலனை (பக்)

பா ரிலெளியவர் துயர்தவிர்
பா லனம்புரியவருமெழிற்
பா ர்வதியினருமைசுகுண
பா லனெனவளர்குகமுருகனைப் (பக்)

அநுபல்லவி.

முக்திஞான முதல்வனை
முராஹரிமருகா விகசித
மரகதமயில்மேல் வருவாயென (பக்)

சரணம்.

பந்தத்திலே பூசுங் கந்தத்திலே பெண்கள்
அந்தத்தையே சதா சிந்தித்திடும் மதி
மந்தத்தினுற் ப்ரம்மா னந்தத்தே யெண்ணுது
மனக்கவலை மிகுத்தலையும்
வினைப்பயனை யகற்றியருள்பெற (பக்)

பாடுபட்டு எங்கும் தேடிவைத்தபசு
மாடு மக்கள் பெரும் வீடு சுற்ற மொரு
கோடி சொத்தும் சுடு காடுமட்டு மென்றே
கொட்டுப்பட்டுப் பட்டினச்
செட்டிச்சுட்டிச் சொன்னதின்படி (பக்)

ஆரியக்கூத்தை நாம் ஆடினுலும் சிறு
நேரமேனும் மனப் பூர்வமதாகவே
சாரமிகுந்தெய்வா தாரணையென்பதைச்
சமரசமுதிர் தமிழ்ச்சுந்தரன்
விமரிசைதுதி மகிழ்பொங்கிடவதி (பக்)

அந்தாபாரோடியமானதோ என்ற மெட்டு.

இராகம் காப்பி—தாளம் ஆதி:

பல்லவி.

தந்தானத் தானன தானன
என்றுடும் மாமயில் வாகன

அநுபல்லவி.

தற்பரனே பொற்பதமே
தஞ்சம் இதிலென வஞ்சம்
அருள் புரி கொஞ்சம்
தகிட தகதிமி ததிங்கிணத்தோம்
ததிங்கிணத் தோம்
ததிங்கிணத் தோம்

சரணம்.

குன்றந் தங்குஞ் சரவணபவ
என்றும் பொங்குந் துதிகமழ்திரு
குருபரனே அறுமுகனே
குகக்கடவுளே உனதொரு
துணைக் கதிபெற வெனதுள விருப்பமிதுவே
தி ததிங்கிணத்தோம். ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம்

தினைக்காவிற் கவணெறிகுறமகள்
தனப்பாகச் சுபகர ஜெயஜெய
தேவா வாவா
திகழ்சுந்தரன் பகர் தமிழ் புகழ்செந்திலம்
பதிவளர் பெறும் மங்களம்

தகிட தகஜெணுத த
ததிங்கிணத் தோம்
ததிங்கிணத் தோம்
ததிங்கிணத் தோம் (தங்)

தவப்பாலகா என்ற வர்ணமெட்டு.

இராகம் தோடி—தாளம் ஆதி.

பல்லவி.

நிஜ தெய்வமே நிகழும் கலியில் (நிஜ)

அநுபல்லவி.

சுஜனர்கள் கூடி சுசராகம்பாடி
தொண்டனும் சுந்தரன்
செந்தமிழ்ப் பண்புறும் (நிஜ)

சரணம்.

சன்னிதானம் தன்னில்
சற்றுமென் குறைகள்
இன்னுமுன் செவிக்கே
ஏறவில்லையோதான்
முன்னுபட் டினப் பிள்ளை
அன்னபாடற் கிள்ளை
தன்னைத்தூது சொல்ல
சொன்னேன் பொய்யல்ல (நிஜ)

நானுந்தன் பாதம்
நம்பினேன் வீதம்
ஏனிந்தப்போதம் இதுவோ நன்னீதம்
வானவர்க்கதிப வஜ்ரவேற்ப்ரதாப
வளரும் பழனி
மலையி லுறையும் (நிஜ)

ஆதாரமேதேனும் நீ தருவாய் என்ற வர்ணமெட்டு.

இராகம் பியாக்கு—தாளம் சாப்பு.

பல்லவி.

எல்லாமவன் செய லென்பதுவே சதா
எண்ணுவதே மானிடர் பொதுவே (எல்)

அநுபல்லவி.

நல்லது கெட்டது என்றறிய—ஏன்
நமக்குப் பகுத்தறி வேயிலையா—நீர்
சொல்லுவீர் பாவ புண்யமிலையா—அதைச்
சோதித்துத்தண்டிப்ப தென்னபொய்யா (எல்)

தன்னாலே தான்கெட்டுத் தத்தளித்து—ஆ
தலைவிதி யென்றே மனஞ்சலித்து—நாம்
பண்ணும் பாவ வினை வளர்த்து—பயனென்
பாராது தெய்வத்தை யே நிந்தித்து (எல்)

தந்தைபங்கிட்டுத் தனங்கொடுக்க—அதைத்
தனையர் பலவாறு செலவழிக்க—அதில்
வந்தலாப நஷ்டம் யார்சுமக்க—ஞாய
வர்த்தமானமு முணர்ந்திருக்க (எல்)

ஐந்துவயதாம் பிள்ளை துருவன்—ப்ரஹ
லாதன்பாலபக்தன் மார்க்கண்டேயன்—இவர்
சந்தேகமில்லா வாழ்வு பெற்றதின்—வழி
சாற்றிடில் தன்தன் முயற்சியின்பலன் (எல்)

மஸ்தான் குணங்குடி பட்டினத்தார்—சீர்
மகாராஜ பத்ர கிரித்திடத்தார்—ஓர்
விஸ்த்தார ஞான வெளிச்சம் பெற்றார்—சக்தி
வீணிலாகாத வெற்றிதானுற்றார் (எல்)

மெய்வல்லயோர்கள் மெச்சும் நீதமே—என்றும்
மேலான ஞான முறைப்போதமே—நூல்
கைவல்யசார நவநீதமே—சாட்சி
காட்டும் சுந்தரன் சொல்லுங்கீதமே (எல்)

திருக்கடையூர்தனிலே என்ற வர்ணமெட்டு.

இராகம் முகாரி—தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

கேள்வி முறையில்லையா செவி கேளாததோசொல்லையா
நாளெல்லாமுன்சுக நாமத்தைக்கூவியும்
நாதமேறு சுரக் கீதத்திலோதியும் (கே)

தெய்வத்தை நம்பியேயில்—கடைத்
தேறுவா யென்றொருசொல்
பொய்யாமோஓ முரு கையா நின் பொன்னடி
போற்றினேன் கந்தனே எதார்த்தமதிலுந்தன் (தே)

அன்னாள் நற்கீரனுக்குச்—சென்
றபயந் தந்த உனக்கு
இன்னாளிற் காருண்ய மில்லாத பஞ்சமோ
ஏனென்றொருதரம் தான்வர வஞ்சமோ (தே)

மூன்னீரலை முழங்கும் செந்தூர்
மூர்த்தியென விளங்கும் மலர்ப்
பன்னீருகையா நின் பாலகன் சுந்தரன்
பக்தி பாராட்டியும் சத்தியம் நாட்டியும் (தே)

ஓ பால பொம்மிகன் என்ற வர்ணமெட்டு.

இராகம் இ-காப்பி—தாளம் ஏகம்.

பல்லவி.

ஓ பால சண்முகா உன்பாதமே
உதவிடும் கதியெனத் துதிசெய்தேன் (ஓ)

அநுபல்லவி.

பூபாலர் போற்றும் வேதப்
புகழ் பழனியங்கிரியுறை சரவணபவகுக (ஓ)

பூபாலர்—புனிதப் ரணவப் பொருளுரை (ஓ)
பூபாலர்—பொதுநலத் தருமகுண நிதியெனப்
புவியின்மிசை முதுமொழிக் கிறைவனெனும் (ஓ)

சரணம்.

மாமனேன் மணிசுத ஹரோகர நமோ நமோ
மகானு பாவனே
தேமிகுந்த காவியஞ் சொல்
தியானச் சுந்தரன் கானப் பண்பது
மானத் துங்கமே.

உனது மனது என்ற மெட்டு.
இராகம் அடாணு—தாளம் திரிபுடை.
(முதல் தட்டி லெடுப்பு)
பல்லவி.

வருக வருக சரவண பவகுக
சிறியனென தெதிர்
சித்திரக்கலபமாமயில் மிசை (வரு)

அநுபல்லவி.

சரணம் சரணம் உனதிருபதமலர்
சதமெனவே அநுதினமே
அர்ச்சித்தேன் (வரு)

சரணம்.

சுடர்வடி வேலா சுபகர நய
திடபுய வீர ஹர கரஜெய
திருச்செந்தி லாதிபா
திகழ்ம்துர பாஸ்கர கிருஷ்ண சுந்தரன்
தமிழ்ச்சந்தப் பாசுரம்
சாற்றுகிறேன் உனையே போற்றுகிறேன் (வரு)

அன்றுதுடனுகரனே ராமுனே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

எந்நாளும் எனையாளாய்
ஈசனே

அநுபல்லவி.

எந்நாளும் என்னையாள்
எனதிடர் பொடிபடவே
எந்நாளும் எனையாள் எனதிடர் பொடிபடப்
பன்னுரு முன்னைப்பாடிப்
பணிந்தேனையா (என்)

சரணம்.

எங்கும் நிறைந்தமயமே கற்பனைக்குறிக்
கெட்டாதவதிசயமே வளர்சுயமே

மங்காத தமிழ்ச்சொல்
சுந்தரன் துதிபதி யே
மங்காத தமிழ்ச்சொல் சுந்தரன் துதிபதி
துங்காபரமதூய சோதியாமல் (என்)

மூரகி கேசவ முகுந்தானந்தா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பக்தர் குணங்குடியின் பரிமளமே
பரிமளமே திரு வருள் வளமே (பக்)

அநுபல்லவி.

சித்ரமயூரவ ஜெகத்குருபரசிவ
சத்திவடிவேலவ சரணகதி
சரணகதி நீயே கருணநிதி

சரணம்.

தேவகுஞ்சரி லோலா செந்திலம்பதி மேலா
சேவைதந்தாளவேண்டித் தினம் பாடினேன்
தினம்பாடினே னுந்தனை நாடினேன் (பக்)

தாமோதரன் மருகா சகலசுகவைபோகா
சாமிசண்முகாகுகா சமயமிதே ஆளச்
சமயமிதே ஆளச்சமயமிதே (பக்)

பிலகரிராகப்ரீய பேரின்பமூட்டுந்தூய
நலமுறும் சுந்தரன் சொல் நவில் நாயகா
நவில்நாயக முந்நீர் புவித்தாயகா (பக்)

ஜல்பல்கே தூகேனி பல்பல்கே தூகேனி என்றமெட்டு.

இராகம் பியாண்டு—தாளம் ஏகம்.

பல்லவி.

அம்பிகை பாலனே நம்பினேன் வேலனே
வாவா நீ வாவா எனைக்காவா (அ)

அன்பர் நேச வம்பர் நாச
செம்பொன் ப்ரகாச னேவிஸ்வாச (அ)

தொகையரு.

ஆதியானவனும் நீ அன்னையுந் தந்தையும் நீ
அடியவர்க்குதவி நீயே
அண்டினேனுனையலாது வேறொருகதியுமுண்டோ
அருள்புரிந் தாளுவாயே.

பாட்டெடுப்பு.

அமரருக்கும் புவனருக்கும்
வரமளிக்கும் மேலவா
அமுதத் தமிழ் சுந்தரன் துதி
கமழுற்றிடு மங்கள ஜெக (அ)

சரசசயபரம பாவன என்ற வர்ணமெட்டு.

ஓரடி

அரகர சரவணபவ நமோ—உன
தருள்மழை பொழிவிரதனே நமோ
கருணாகரக்கடவுள் நீ யில்லையோ உனைக்
கதியெனத் தினந் துதி புரியுமென்
கவலைதீரக் கண்பாராய்

உடலுயிருனக்கபயம் அபயம் நாளும் என
துளமகிழவே யுறுதி துணைதந்தாளும் மழுப்
படையேந்திய கடவுள் குமரனே துதி
பகரும் சுந்தரன் சுகிர்த செந்தமிழ்
பரவு புகழ் பண்பாள (அ)

கண்ணுக்குத்தோன்றி மறைந்தவனே என்ற வர்ணமெட்டு.

இராகம் தேசிகதோடி—தாளம் ஏகம்.

பல்லவி.

மாம்பழனு புரி வாழுங்குக
மாதவர் போற்றுங் கண்ய சண்முக (மா)

அநுபல்லவி.

பாம்பணி ஆண்டவன்
வேண்டிட ஓங்கார
உண்மை யுபதேசித்த

ஒப்பேது மில்லாத கர்த்த
உலகுக் காதார சித்த (மா)

சரணம்.

உத்தமாவுனையே நத்தினேன் மயில்ந
டத்தி யென்முன் வருவாய்
அத்தனேயுனைத் துதிக்கும் யான்பெறச்ச
வுக்ய வாழ்வு தருவாய்
அதிநயசெந் தமிழ்பகர்சுந்
தரன்மகிழ்பண் புரையும்பதி

ஆடுபோம்பே ஆடுபோம்பே என்ற வர்ணமெட்டு.

இராகம் நாகவராளி—தாளம் ஆதி.

பாடுவோமே பாடுவோமே—நல்ல
பக்தியுடன் பஜனை பாடுவோமே (பா)

ஈடில்லா செங்கதிர்வே லிறையோனை—மகிழ்ந்
தேற்றிய கீர்த்தனங்கள் பாடுவோமே (பா)

சோதித்துப்பஞ்சமத்தின் சுதிகூட்ட—நாதந்
தொனிக்கும் மிர்தங்கம்ஜதி களை மீட்ட—கணம்
சாதிக்கும் லயத்துடன் சரிகாட்ட—மணஞ்
சமரச நிலையுடன் பாடுவோமே (பா)

கூவியழும் பிள்ளைக்கே வயிறுநிறையும்—தெய்வம்
கொண்டாடுகின்றவர்க்கே யருள்புரியும்—அதை
மேவியறியாதவருக் கென்னதெரியும்—குகன்
மெய்யான தெய்வமெனப் பாடுவோமே (பா)

சூத்திரப் பாவையாகு மிந்தத்தேகம்—இதைத்
துணையென்று நம்புவதே சந்தேகம்—இது
போத்தியிருக்கும்போதே முன்தியாகம்—கொண்டு
பொய்யாத வாழ்வுபெறப் பாடுவோமே (பா)

பெண்டு பிள்ளைகளெனும் பெரும்பாசம்—நம்மைப்
பிடித்து வருந்தச்செய்யும் பிரையாசம்—கொஞ்சம்
ஒண்டியொளிந்துவரும் சாவகாசம்—தன்னில்
உண்மையாய்ச் சண்முகனைப் பாடுவோமே (பா)

வேதநாயகம் பிள்ளை சலிப்பென்று—யாரும்
விளம்புவார் பொருந்திய மொழியொன்று—மன
வாதனைப்பட்டவர்க்கே பெரிதன்று—புவி
வாஞ்சையை மித்தையெனப் பாடுவோமே (பா)

வந்த வினையகற்றும் வள்ளிமோகன்—அந்த
வானவர் வணங்கப் பிறந்தயோகன்—கமழ்
சுந்தரன் செந்தமிழ் மொழிந்தபாகன்—பதம்
சூடிக்கொண்டாடித்துதி பாடுவோமே. (பா)

திருவருள்புரிவாய் என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ஆதி.

பல்லவி.

அரகர முருகா ஆறுமுக குகா (அ)

அநுபல்லவி.

சுரர்குல பாலா சுடர்வடி வேலா (அ)

தொகையறு.

அன்போடு நின்பாதம் நம்பினேன்
கந்தா கடம்பாவென் துன்பேகவே
தந்தான மென்றே சிலம்போசை யுண்டாக
வந்தாளு மின்பாகவே (அ)

கோலச் சிகைமிசைப் பவனிவரும் குமர
குறமாது தனபாகனே நற்குணங்குடியா
ஆலத்தைப் புசித்தோன் அருமைபெறும் பால
அமரர்நிதி அருணகிரிசொல் செந்தமிழ்க்குடையா ()

செந்தேன் தமிழ்ச் சுந்தரன் செப்பிடுந் தோத்திரச்
சீர்பரங்குன்றில் நாளும்
அன்பாளர் பண்போடு கொண்டாடும்
மங்காத வைபோக வாழ்வு நீளும் (அ)

பக்தர் பஜனை பாடுகிறார் என்ற வர்ணமெட்டு.

இராகம் பைரவி—தாளம் திரிபுடை.

பல்லவி.

சித்தம் நிலைப்பதே சிவம்
சிவ சாம்பவென்று (சி)

அநுபல்லவி.

பக்தியோடு மகிழவே சாரூபந்தத்தில்
பகலிரவிலும் ஞான பரமானந்தத்தில் (சி)

சரணம்.

தீயகுணனிவனெனவும் பலர்சொல
நாயிலுங் கடையா யுளறியே காம
நோய்பிணிகொலை களவெனும் பவமுறும்
மாய்கையிலழியாத வழியதுபெறும் (சி)

வந்தவர் போனவர் வருபவர் பலர்சிலர்
இந்தப்ரபஞ்சமொரு சத்திரமாகும்
சந்ததமும் மதுரிதச் செந்தமிழ் கமழுஞ்
சுந்தரன் மொழிந்ததுதி சிந்தனையதனிற் (சி)

பாங்கான மயிலே என்ற மெட்டு.

இராகம் ஆனந்தபைரவி—தாளம் ஆதி.

பல்லவி.

பாதாரம் கதியே பரமநிதியே
பகருதவியே பரிவுடனருள்புரி

அநுபல்லவி.

நாதவிந்து ஜனனம் நடத்தும் பஞ்ச
பூதங்களுன் சரணம் இதேபிரமாணம் (பா)

சரணம்.

படிக்குள் தென்கிரி பழனியிலனுதினம்
பஜிக்கும்தொண்டர்கள் பரவச நிலையுறும்
ஜெயக்கடம்பனே துதிகமழ் சுந்தரன்
செழிந்தமிழ் முதங்கமழும்
சதங்கைப் (பா)

மதுரை மான்மியச் சிறப்பு.

காட்சி கண்காட்சியே என்ற வர்ணமெட்டு.

இராகம் தேசிகதோடி—தாளம் ஆதி.

பல்லவி.

பூலோக சொர்க்கமே
புகழத்தகு மதுரைப்பதியது (பூ)

மகுடங்கள்.

பொருந்துமொழி யமைந்தொரு
கடம்பவன மடர்ந்ததிரு (பூ)

புரந்தரன் வரம்பெறுஞ்
சரண்புகும் பரந்திகழ் (பூ)

போதெலாம் ஜெபதபங்க
ளோதுகி தமும்முழங்கு (பூ)

புகழவோர் நாவும்போதுமோ நாம்பாட
மகிழ்தரு யோக பாகமா விசேட (பூ)

பொற்பதி நேயம ளாவிய ஸ்தூபிக
ளூற்றிடு கோபுர மானவை மேவிய (பூ)

புங்கவருந் தங்குதவங் கொண்டிடு
பண்புதருஞ் செந்தமிழும் பொங்கிடு (பூ)

போதத்துவாதச் சாந்தப்பதியென
வோதிட்டால்முற் பாந்தப்பவமறும் (பூ)

அநுபல்லவி.

ஆலயந் தோன்றும் மிக்க
அதிசய மதிசயங் கதியுதவியமய (பூ)

சரணம்.

பொற்றாமரை யுற்றகுளம் சுற்றும்வேத வியாசமே
புந்திமகிழ் கொண்டு வண்ணப் பைங்கிள்ளைகள் யேசுமே
நற்றுணையா யர்ச்சகரும் நாடிடும் விலாசமே

ஞானவொளிர் மாமணி மீனாட்சி யருள்
நட்புதிக்க வைக்கும் திருக்காட்சி திவ்ய
மான சொக்க லிங்கர் நிலை நீட்சி

மகத்வ தெய்வ சாட்சி
மனுமுறையி னாட்சி
இகத்திற் கண்ட சூட்சி
என் சொல்வேன் பெரும் மாட்சி கொளும் (பூ)

கண்டோர் புதுமண்டபத்தைக் கற்பக மென்பார் நயம்
காட்டும் சிற்பி சாஸ்திரிகள் கைத்திறத்தி னோவியம்
பண்டைய காலப்பாண்டியர் பக்தியே ஜெயம் ஜெயம்

பார்த்திருந்தாலும் பசியெடாது இன்பம்
பாவிப்பதன்றி சிந்தைகெடாது புண்ய
க்ஷேத்ரமா மிதற்கு வேறீடேது

செந்திரு மகள் பாது
செழிப் பென்றுமோ யாது
சுந்தரன் மகிழ்ந் தோது
துதிக் கருள் தப் பாது—செய்யும் (பூ)

கண்டேன் கண்டேன் என்ற வர்ணமெட்டு,
இராகம் தேசிகதோடி—தாளம் ஆதி.

பல்லவி.

தந்தோம் தந்தோமென்றாடிடும் மயூரா
ததியருள் கெம்பீரா

சத்ய சன்மார்க்க சரா
சம்போசிவ குமாரா (தந்)

மகுடங்கள்.

(ஒவ்வொன்றுக்கும் தந்தோமென்ருடிய என்றெடுக்கவும்)

சாதித்திடும் நீ தப்பிர
சாதத்துட னேதச்செயல் (தந்தோம்)

தகுந்தவிதம் மகிழ்ந்துணர
செழுங்கருணை வரங்களேயே (தந்தோம்)

தரையிற் றுயரப்படுபவர்
குறையற் றிடநற் பலனதைத் (தந்தோம்)

சுந்தரன் சதா துதி
சொலுங்கலிவரதா
துணிகர விரதா
உனக் கரிதா உனக்கரிதா (தந்)

நாரதர் வள்ளிக்கு நன்றி கூறியது.

போம் போம் பெரிய புரட்சிக்கார முனியே என்ற மெட்டு.

இராகம் தோடி—தாளம் ஆதி.

பல்லவி.

சாட்சாத் குக சரவணபவனின் பெருமை
தனையே சொல்வ தருமை திருத்தணிகை (சா)

மகுடங்கள்.

சகல வுலகும் புகழும் திலகமென வளர் (சா)
சா—லவிமரிசை பெருகிடு விரதவி
சா—லசமுக வடியவர்கள் துதிபகர்
சா—மளசொரூப மருக முருகனெனும்
சா—மி பிரணவப் பொருளுரை விதரண
சா—ரமுணர் தருவினைய வரதஜெய (சா)

அநுபல்லவி.

மாட்சி மணம்புரிந்திடி லிதுவேநல்
மார்க்கமாம் சௌபாக்ய யோக்ய மாப்பிள்ளை (சா)

சரணம்.

கண்யன் கனகமயில் வரு சுப்ரமண்யன்
கருணை முகிலென வளரும் (சா)
புண்ய புலவர்கள் புகழ் சொலுபதி
பூவையுந்தன் ஆவலின் பக்காவலன் (சா)
தேனே செந்தினைப்புனம் வளர் மடமானே
தித்திக்குஞ் சொற்கட்டுந்—தேனே
ஞான சுந்தரன் பகர் நயமிது
நாரதச் சங்கீத வித்வ நேமியாம் (சா)

பேயாண்டி தன்னைக்கண்டு என்ற வர்ணமெட்டு.

இராகம் எதுகுல காம்போதி—அடதாள சாப்பு.

பல்லவி.

விடமாட்டேன் விடமாட்டேன்
விட்டால் நானொருபெண்ணு
வேண்டுமென்றாலும் பாரையா
பன்னீருகையா (விட)

அநுபல்லவி.

தொடமாட்டே னென்று முன்னே
சொன்ன கன்னிகை என்னை
உடன் கூட்டுசெய்து பின்னே
ஒளிந்தோடலாமோ உன்னை (விட)

சரணம்.

பெண்பாவம் பெரிதன்றோ பிடிவாதமேதுக்கு
பேதைநா னுன்னிடம் பேணேன்காண் வாதுக்கு
எண்ணந் துணிந்துவோ இப்பெரும் சூதுக்கு
இசையேன் இசையேனெத்தி ஏமாற்றுந்தோதுக்கு (விட)
குன்றுதோறுமிருக்கும் குகைகளில் ஒளிந்தாலும்
கோபுரமாமதில் சூழ் கோவிலிற் புகுந்தாலும்
சென்று தவம்புரிவோர் சிந்தையில் நுழைந்தாலும்
சீமாட்டி உன் தாய்உமா தேவியே மொழிந்தாலும் (விட)

அன்னவஸ்திரத்திற்கும் ஆதார வுதவிக்கும்
அஞ்சாதே நானென்று ஆணைசொல்லும்வரைக்கும்
நன்னய சுந்தரன்சொல் நவீனப்புகழுரைக்கும்
நாதா உனது பாதம் நான் பிடித்தேனென்றுரைக்கும் (விட)

சேந்தில் ஆறுமுகனே எந்தனை என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் காப்பி, தாளம் ஏகம்.

பல்லவி.

வேலுமயிலா உந்தனை
வேண்டினேன் ஆண்டருள்வா யெந்தனைவடி (வே)

அநுபல்லவி.

எந்தவேளையிலும் மாதர்மேலோ சிந்தனைவடி (வே)

சரணம்.

ஆலமுண்டோனுக் கருளே புரிந்தவா
ஆறுமுக மானவா
கோலா கலவா குகா சண்முகா வாவா
கொண்டாடினேன் சுந்தரன் (வே)

ஏமாந்துனே முத்து என்ற ஜாவளி வர்ணமெட்டு.

ஆதார முன்னையல்லாது வேறேது எனக்
கருளது தரவருக ஓ முருகா (ஆ)

அநுபல்லவி.

பாது காப்பதுன் பாரம்
பற்றினே னுன்பா தாரம்
சோதனை செய்வதழகோ ஓ முருகா (ஆ)

சரணம்.

சாதுஜன சமுகா
சகல வைபோகா சுகா
ஏதிந்த வர்மம் சொல்லையா ஓ முருகா (ஆ)

அல்லும் பகலும் நிதம்
அடியேன் துதித்த விதம்
கல்லுங்கரைந்துவிடுமே ஓ முருகா (ஆ)

சுந்தரன் துதியே
சொல்லும் புகழ் கதியே
செந்தில் நகரின் செல்வனே ஓ முருகா (ஆ)

சாந்தமும் லேக்கா என்ற வர்ணமெட்டு.

இராகம் சாமா—தாளம் ஆதி.

பல்லவி.

கன்மமுண்டானல் ஜென்மம் விடாது
கைவல்ய மிதே கவனம் ஓ நெஞ்சமே (கன்)

அநுபல்லவி.

வன்ன சுழல் காற்றினில்
வழங்கும் செத்தை போலவே (க)

சரணம்.

தன்னை இன்னுரென்றும் தனக்கதிகாரியவர்
தன்மையு மின்னதென்றும் தானறிந்தோர்க்கே யென்றும்
ஜென்மமில்லாது மேவும் ஜீவன்முக்தராம் பூவில் (க)

வரநாரத நாராயணு என்ற வர்ணமெட்டு.

இராகம் விஜயஸ்ரீ—தாளம் ஆதி.

பல்லவி.

முருகா ஹரி மருகா உனதுள
முருகா வித மெதுவே அறிகிலேன் (மு)

அநுபல்லவி.

வருவாய் மயில்வாகன மேல் விரைவாய்
மகிழ்வாய் வர
மருளத் ததியிது (மு)

சரணம்.

கனவிலும் நினைவிலும்
கருதினேன் நானே
கருணை செய்யுமெழிற்
கடவுள் நீதானே (மு)

இனியார் புக மேலதையனே புவிமேல்
இசையோதிடு சுந்தரன் துதிகொள் (மு)

மானுமதுரையிலே என்ற தெம்மாங்கு மெட்டு.

இராகம் தேசிக சுருட்டி—தாளம் ஆதி.

பின் முடுகு.

மாயாப்ரபஞ்சத்திலே கொண்ட மானிடப்பிறவியிலே
ஓயாக்கவலையினல் நெஞ்சம் உருகி மெலிந்தனையோ
ஓதப்படுமுதி யோர்பற் பல அறு
போகச்சுருதியே வீண்சொற் பனமென (மா)

மீனுட்சி சொக்கநாதா மேலா மதுராமிர்த
ஞான பரம்பொருளே உன்னை நம்பி வணங்கினேனே
மிஞ்சுஞ் சங்கட துன்பங் குன்றிட
இன்பந் தந்திடு தஞ்சம் உன்பாதம் (மா)

சங்கீதச்சங் கதியில்வளர் சாஹித்ய சுந்தரன்சொல்
மங்காத வாழ்வுதர வுற்ற மாதா பிதாவும் நீயே
மற்றென் சொல்துதி முற்றுன் சமுகமே
நத்தும்படியருள் மெய்க்குங் கடவுளே (மா)

கைவருசை செல்லாது போம் என்ற மெட்டு.

இராகம் சுருட்டி—தாளம் ஆதி.

பல்லவி.

கேட்பதொன்று தானே
கெஞ்சியே வரம் (கே)

அநுபல்லவி.

ஏய்ப்பதுனது நெஞ்சம்
எல்லாந்தெரியுங் கொஞ்சம்
ஏற்பதற் கென்ன வஞ்சம்
ஏழைநானேயுன் தஞ்சம் (கே)

கண்ணிகள்.

தாட்டிகஞ் சேர் தணிகை
சம்பன்னமே கார்த்திகை
நாட்பவனி வருகை
நான் கண்டு கொண்டேன் வகை (கே)

செந்திநகர் வாசமே
சீர்த்தி மிகு வியாசமே
சுந்தரன்விஸ் வாசமே
தூயாவேனுத் தேசமே (கே)

பிணியற்று வாழ் வதற்கும்
பெருமையாஞ் செல்வத்திற்கும்
துணையாக நீ யென்றைக்கும்
தோன்றி யருள்வதற்கும் (கே)

வாவா முருகா வேலவா வள்ளிமணவாளா என்ற மெட்டு.

இராகம் காப்பி— தாளம் மிசிரஜாதி ஏகம்.

பல்லவி.

காவா முதல்வா மாதவக்
கண்யச் சுபச் சைவ (கா)

அநுபல்லவி.

தேவாதி தேவ சீர்பெரும்
செந்தூர் வளர் கந்தாவெனக் (கா)

சரணம்.

நீயே எந்தன் மாதா பிதா
நெஞ்சாரச் சொன்னேனே சதா
தாயாம் வள்ளி நேயா வுள்ளம்
தானே கள்ள மேனேமெள்ளக் (கா)

சஞ்சலமும் மிஞ்சுதையா
தாழேனென்று லென்னபொய்யா
கெஞ்சினானுன் தஞ்சமோதும்
இன்சொலாலே நெஞ்சிரங்கிக் (கா)

சுந்தரன் சந்தத்துதி
சூட்டியருள் காட்டித்துதி
சிந்தைப்படி இன்பக்கதி
தந்தற்புதப் பண்பைப்புரி (கா)

ஸ்ரீமத் காந்தி ஜேயம் பெறும் வேதாந்தி என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ஏகம்.

நாவார நின்புகழைப் பாட
நல்லோரிணக்கம் கூட
நயந்தருள்வி சேடத்—திரு
நாள் மகத்துவ நீளும் பொற்பழ
னுபுரிக் கதி பாவருட்குரு
நாதா விது ப்ரம்மாதமாமோ—எனக்
காதாரந்தந்தால் வீணிற்போமோ (நா)

அன்பாளர் குறையகற்றுந் தூயா
ஐகிகக் கார்த்தி கேயா
அம்பாள் மீனாட்சி சேயா
ஆதிவித்துவ மோதுமுத்தமிழ்
பாவலர்க்கனு கூல கர்த்தனே
ஆநந்தஞ்சமான தெய்வம் நீயே—இனி
அஞ்சாதென் னோர்மொழிசொல்வாயே (நா)

செந்தேனபிஷேகப்ர தாபா
செழித்திடும் புண்ய லாபா
ஜெகத்தி லெங்கும் வியாபா
சீர்பெறுந்தமி ழோது சுந்தரன்
கீதாஞ்சித ஞானபண்டித

சிங்கார மாமயூரா வாகா குற
மங்கைமணம்பெறும் வைபோகா (நா)

என்ன சிங்காரமே என்ற வர்ணமெட்டு.

இராகம் காமாசு—தாளம் ஆதி.

பல்லவி.

காட்சி கண்காட்சியே திருவனந்தபுரக் (காட்சி)

அநுபல்லவி.

மாட்சிமை தங்கிடும் அர
சாட்சிசெய்புந் தாட்சியில்லா (காட்சி)

சரணம்.

மாதமும் மும்மாரியாகப் பெய்யுந்தர்ம நீதியே
மாநிலம் புகழும் மலே யாளமெனும்க்யாதியே
மாபலாவாழை தென்னைகள் சூழ்ந்து—நிழ
லேதரவேமா மடல்கள் சாய்ந்து—சுகந்த
வாசனைப் புஷ்பத் தேறலும் பாய்ந்து
பரிமளிக்கும் சாரம்
இணையற்ற சிங்காரம்
தனைச்சொல்வோர் வாரம்
போராத விபகாரமிது (காட்சி)

பார்புகழும் பத்மனுபன் சன்னதி யமைந்ததும்
கோவிலெதிரே இரண்டு குளங்க ளிசைந்ததும்

கோடா கோடியாகச் செலவிட்டு
புத்தங் கச்சேரி என்றமைத்த ஹைக்கோர்ட்டு
அதின் எதிர் மாதவ ராயர் ஸ்டேட்டு

சுற்றிலுங் கம்பிக் கேட்டு
சூழ்ந்த போலீஸ் பீட்டு
சுந்தரன் தமிழ்ப் பாட்டு
சொல்ல முறைஹீன் கூட்டு இது (காட்சி)

தானதவ ஞானமதி லேசிதந்த கண்ணியன்
தன்னுயிர்போல் மன்னுயிரைக் காத்திடும்நற்புண்ணியன்

சத்ய தெய்வ பத்மனுபதாசன் செல்வம்
மெத்தமேலோங்கும் நயவிலாசன்

சித்திரையாம் நட்க்ஷத்ரம்
ஜெனித்ததிடக் காத்ரம்
பக்திமிகுசற் பாத்ரம்
பரிபாலிக்கும் க்ஷேத்ர—மிது (காட்சி)

பதிப்பாசிரியர்

ஸ்ரீமான் எம். கே. சந்தானகிருஷ்ணக் கோனார் அவர்கள்மீது

வாழ்த்து.

சரிசரி சாமுத்ரி காலக்ஷணம் என்ற மெட்டு.

இராகம் தேசிகம்—தாளம் ஆதி.

பல்லவி.

மதிமிக்கோன் மதுரைப்பதி தனிலற்புத (மதி)

அநுபல்லவி.

மாசற்றவி லாசச்சன
ராசிப்படி நேசித்திட (மதி)

சரணம்.

மதுரசந்தப் புலவர் புந்தி
மகிழும் சங்கப் புத்தகம்
மாநிலத்தி லேப்ரசித்தி
தானளிக்கும் வர்த்தகம்
மங்கிடாதவன் பெயர்
தங்கும் யாதவன் மன
மகிழ்தருஞ்சுந் தரன்கீர்த்தன
விதமதிற்பண் புறும்பாத்திய (மதி)

புனிதவிர்த்தி விரத சத்ய
பொதுநலச் சகோதரன்
புருஷவர்க்கந்தனிலோர் முக்ய
புதுவிதத்த ராதரன் வை
போக பாக்கியன் சுக
யோக வாக்கியன் அருள்
பூணும்சந் ,தானக்ருஷ்ணக்
கோனென்றுமே வாழிவாழி (மதி)

வாழ்த்து மங்களம்.

மாதுபாக மான்வா என்ற மெட்டு.

ஸ்ரீகணேச மங்களம் ஜெயஜெயசு மங்களம்
சீர்கலை மாதேனும் செல்விக்கு மங்களம்
செங்கதிர் தங்கவேல் துங்கவன் சேவைக்கு மங்களம் (ஸ்ரீ)
சோமசுந்தரேஸ்வரத் தூயனுக்கு மங்களம்
சூட்சி மீனாட்சியின் ஆட்சிக்கு மங்களம்
துதிபெறும் மதுரையம் பதிவளந் துலங்கு மங்களம் (ஸ்ரீ)
புதுமை மண்டபந்தனில் புத்தகத்தின் வர்த்தகம்
பூணும்சந் தானக்ருஷ்ணக் கோனுக்கும் மங்களம்
புந்தியே மகிழ்ந்துசொல் சுந்தரன் புகன்ற மங்களம் (ஸ்ரீ)

அவையடக்கம்.

நன்னூலி லக்கணந் தொல்காப்பிய விர்த்தியை
நயந்தெரிந் துணர்ந்தறிகிலேன்
அந்நூல்க ளத்தனையு மாராய்ந்த பெரியோரை
அண்டிநான் கற்றறிகிலேன்
துன்னுமொளி தீபமுன் தோன்றுமின்மினிபோலுந்
துணிவுற்று தெய்வ துதிதாய்
என்மன திசைந்தவா றியற்றினேன் கற்றோர்க
ளென்பிழை பொருத்தருள்வரே.

இதன் இரண்டாம் பாகம் வெளிவந்துவிட்டது.
விலை அணா 0—8—0.

உ சிவமயம்.

கனவிற்பாடிய

கந்தன்றுதி.